(மூற்பகல் 11-45)

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(2) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக்கொள் வதற்கு தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(3) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறை வேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம் மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 35/1978) மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள் ளேன்.

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவை யின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1978).

2. 1978 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 32/1978).